


# பாவ அறிக்கை ஜெபம் (1)

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப் போல நாங்கள் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்தோம். செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து வந்தோம்; எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள் மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி நாங்கள் இனித் தேவ பக்தியும், நீதியும், தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்துவர, இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்கு கிருபை செய்தருளும். ஆமென்.